## பாரதியும் சுதந்திரமும்

### குறிப்புச்சட்டம்

- முன்னுரை
- பிறப்பு
- தேசியக் கவி
- பாரதியின் வடுதலை உணர்வு
- ஒற்றுமை
- நாட்டுப்பற்று
- முடிவுரை

### முன்னுரை

சுதந்திர போராட்டத்தில் மிக முக்கிய பங்கு வகித்தவர். இருளில் கிடந்த மக்களை வெளிச்சத்திற்குத் தனது பேச்சின் மூலம் கொண்டு வந்த ஒரு மாமனிதன் மகாகவி பாரதியார் அவர்கள் சுதந்திரப் போராட்டக் களத்தில் கனல் தெறிக்கும் விடுதலைப் போர் கவிதைகள் வாயிலாக மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர்.

### பிறப்பு

இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் டிசம்பர் மாதம் 11ம் தேதி 1882ம் ஆண்டு சின்னசாமி ஐயருக்கும் லட்சுமிக்கு அம்மாளும் மகனாகப் பிறந்தவர். இவருடைய இயற்பெயர் சுப்ரமணியன் இளம் வயதிலேயே தமிழ் மீது ஆர்வம் கொண்டவர்.

### தேசியக்கவி

இவர் தேசியக்கவி என்று பாரட்டப்படுகிறார். ஏனெனில் போராட்ட காலத்தில் தேசிய உணர்வுகளை ஊட்டும் பல்வேறு கவிதைகளை மக்களுக்குப் படைத்து ஒருங்கிணைத்த காரணத்தால் தேசிய கவி என போற்றப்பட்டார்.

**“மண்ணும் இமயமலை எங்கள் மலையே.... !**

**மாநிலமீது போல் பிறிதிலையே**

**இன்னறு**

**நீர்க்கங்கை ஆறெங்கள் ஆறே....! இங்கிதன்**

**மாண்பிற்கெதிர் எது வேறே”** என்று பாடியவர்.

## பாரதியின் விடுதலை உணர்வு

மக்கள் அடிமைப்பட்டு இருந்த போது பாரதியார் ‘இந்தியா பத்திரிக்கையின் மூலம் மக்களிடையே விடுதலை உணர்வைத் தூண்டும் வகையில் பல எழுச்சியூட்டும் கட்டுரைகளை எழுதினார். பாரதியாருக்குத் தமிழ்நாட்டில் இருந்த ஆதரவைக் கண்டு பத்திரிக்கை நடத்த தடை விதித்தது அவரைச் சிறையில் தள்ளினார்கள். அதனைக் கண்டெல்லாம் பாரதியாரின் விடுதலை உணர்வு கொஞ்சம் கூட குறையவில்லை.

இவர் சுதேசமித்திரன் எனும் இதழ்களை நடத்தி வந்தார். இதழ்களை நடத்துவது சாதாரணமான விஷயமாக இருக்கலாம். ஆனால் அதில் அசாதாரணமான நிகழ்வை நடத்தி காட்டியவர் பாரதியார் இவர் நாட்டின் சுதந்திரத்திற்காக மட்டுமல்ல மொழி, இனம், சமுதாயம், பொருளாதாரம், பெண் விடுதலை என அனைத்திற்கும் பாடுபட்ட ஒரு உன்னத கவிஞர் மகாகவி அவர்கள்

**“தேமதுர தமிழோசை உலமெலாம் பரவும்**

**வுகை செய்தல் வேண்டும்.**

**ஏன்று பாடினார். பெண்களின் விடுதலைக்காக**

**பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**

**பாரினில் நடத்திய பெண்கள்’**

என்று புதுமை பெண்களைப் படைத்து காட்டினார்.

## ஒற்றுமை

நாம் அடிமைப்பட்டு உள்ளோம் என்பதை மறந்து சாதி, இனம், மொழி போன்றவற்றால் மக்கள் பிரிந்து இருந்தனர் அதனைக் கண்டு

**‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில்**

**ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே”**

என்று மக்கள் ஒற்றமை உணர்வை வளர்க்கப் பாடுபட்டார். வேறு நாட்டவரின் பிடியில் இருந்து நாம் விடுபட வேண்டும் என்றால் நம்மிடம் ஒற்றமை இருக்க

வேண்டும் எனவும் ஒற்றுமையே பலம் என்பதை அறிந்து விடுதலை போருக்கு மக்களை முதலில் தயார்படுத்தினார்.

## நாட்டுப்பற்று

பிறந்த நாட்டின் மீது நாம் கொள்ளும் தேசப்பற்று நம் தாயின் மீது இருக்கும் பற்றுக்கு சமமாக இருக்கும் நாட்டின் மீது பற்று இருந்தால் தான் தேசத்தை நல்வழிப்படுத்த முடியும் என்பதை மக்களின் மனதில் விதையாக விதைத்தார்.

**'நாமிருக்கும் நாடு நமதென்று அறிவோம்**
**நமக்கே உரிமையாம் என்பதறிவோம்'**

என்பது எமது பாரதியின் உரிமை குரலாக இருந்தது. சுதந்திரம் அடைவதற்கு முன்பே தன்னுடைய சுதந்திர தாகத்தைத் தீர்ப்பதற்காக

**"ஆடுவோம் பள்ளு பாடுவோமே ஆனந்த**
**சுதந்திரம் அடைந்து விட்டோம்"** எனப்பாடினார்.

## முடிவுரை

பாமர மக்களுக்கும் தனது கவிதைகளும் கருத்துக்களும் சென்றடைய வேண்டும் என்று மிக எளிய நடையில் தனது கட்டுரைகளை எழுதினார். தமிழ் மொழியின் மீது இவருக்கு இ.ருந்த பற்று காரணமாக உள்ளது.

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மெடாழிபோல்**
**இனிதாவ தெங்கும் காணோம்"**

என்று போற்றிப் பாடியுள்ளார். இப்படி நாட்டிற்கு நலப்பணிகளைச் செய்வதையே உயிர்மூச்சாகக் கொண்டு செயல்பட்ட பாரதியார் அவர்கள் 1921ம் ஆண்டு செப்டம்பர் 11ம் தேதி இவ்வுலகை விட்டு விண்ணுலகை அடைந்தார்.

**ச.மஞ்சுளா**
**தமிழ்த்துறை இரண்டாம் ஆண்டு**